கட்டம் வந்தது; அதாவது நான் அவர்களை நேசித்தும் கூட, முடிவாக அவர்களால் அத்தவறை விட்டு விலக முடியாது என்பதை அறிந்து கொண்டேன். நான் சாட்சிகளை அழைத்துக் கொண்டு அவரண்டை சென்றேன், ஆனால் அது கிரியை செய்யவில்லை. எனவே நான் அதை சபையண்டை கொண்டுவர வேண்டியதாயிருந்தது. கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று, மேடையிலிருந்து நான் இவ்வாறு கூறவேண்டியதாயிற்று: “இனிமேல் நான் அதை என் காதுகளால் கேட்க விரும்பவில்லை. நான் அதிலிருந்து என்னை விடுவித்துக்கொண்டு தேவனிடம் அதை ஒப்படைக்கிறேன். பாருங்கள், நான் அவரிடமே திரும்ப அதை ஒப்படைக்கிறேன்” என்று கூறினேன்.

42 அழைக்கப்பட்டிருந்த அந்த ஜனங்கள் உடனே எப்படிப்பட்டவர்கள் என்பதைக் காண்பித்தது…இப்பொழுது, வேத வசனத்தின் மூலமாக அவர்கள் திருத்திக் கொள்ளுதலுக்கு வரும்பொழுது, வேதவசன பூர்வமான திருத்திக் கொள்ளுதலுக்கு ஒரு மனிதன் நிற்க முடியவில்லையெனில், அவன் கோபமடைந்து, பதற்றமடைந்து பேசினால், அது அவன் தேவனோடு சரியாக இல்லை என்பதை காண்பிக்கிறது. உண்மையே! ஆனால் ஒரு அசலான தேவனுடைய பரிசுத்தவானோ வார்த்தையின் மூலமாக தேவனோடு ஒப்புரவாகிவிடுவான். அது உண்மையே! திருவசனமே சீர்திருத்துகிறதற்கான வழியாயுள்ளது. அச்சகோதரர்கள் தேவனுக்கு மிகவும் நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும். எதற்கென்றால்…

43 பாருங்கள், கடைசி நாட்களில் “கள்ளக் கிறிஸ்துக்கள் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிப்பார்கள்” என்று வேதம் கூறியுள்ளது. ஆனால் அது சாத்தியமானதல்ல. இல்லை, ஐயா, தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் முன்குறிக்கப்பட்டவர்களாவர். எனவே அவர்கள் வஞ்சிக்கப்படமாட்டார்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளுங்கள்.

44 எனவே, உடனடியாக அச்சகோதரர்கள் அடுத்த நாளிலே வீட்டுக்கு வந்தார்கள், பாருங்கள், இன்னமும் அவர்கள் அக்கொள்கையைப் பிடித்துக்கொண்டு தான் இருந்தார்கள். அவர்கள் என்னிடம் அவர்களுடைய வேதவசனங்களை கொடுத்தார்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் வேதவாக்கியத்தின் மூலமாக அவர்கள் கூறிய யாவற்றையுமே கடிந்துகொண்டார். உங்களுக்குப் புரிகிறதா? எனவே அவர்கள் அப்பொழுது அதைப் புரிந்துகொண்டனர், அந்த தெரிந்துகொள்ளப்பட்ட குழுவின் மக்களே, தேவனுடைய சமூகத்தில், அதைப் புரிந்துகொண்டு அவர்கள் சென்றனர். அவ்விதமான மக்களுக்காக அது என்னை நன்றியுள்ளவனாக்குகிறது. ஆம் ஐயா. அப்படிப்பட்டவர்கள்தான் உண்மையான மனிதர்களாவர்.

45 தவறாயிருக்கிற ஒரு மனிதன், தான் தவறு என்று நிரூபிக்கப்படும்பொழுது, அதை உணர்ந்து தான் ஒரு கிறிஸ்தவனாக

இருந்தார்கள், அப்படியிருந்தும் கூட, அவர்களும் அன்னிய பாஷைகளில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எதற்காக அவன் அதைச் செய்தான்? உண்மையான எக்காளமும் கூட ஒரு விளங்காத சத்தத்தை மக்களுக்கு கொடுக்கட்டுமே என்றுதான். எவன் யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணுவான்? புரிகிறதா?

49 இவ்விதமான காரியம் அங்கே எழும்பி வந்தபொழுது… இப்பொழுதும், கூட்டத்தில் நமக்கு அப்படிப்பட்ட ஜனங்கள் இருக்கிறார்கள்…இங்கேயே ஒருவர்…கனடா தேசத்தில் ஒரு கூட்டத்தில் எனக்கு முன்பாகவே ஒருவர் கடந்து சென்றார். உளவுத்துறை பிரதிநிதிகள் அம்மனிதனை ஆண்புணர்ச்சிக்காரர் என்ற குற்றத்தின்பேரில் அவரைப் பிடித்தார்கள். பார்த்தீர்களா? அந்நபர் என்னிடம், “தேவன் எனக்கு இருதயத்தை பகுத்தறியும் வரத்தைக் கொடுத்திருக்கிறார்” என்றார். “அல்லேலூயா, இங்கே ‘யோவான்’ என்ற பெயருள்ள ஒருவர் இருப்பதாக இப்பொழுது கர்த்தர் என்னிடம் கூறினார்” என்றார்.

50 ஒரு இளம் பெண் ஒருநாள் காலையில் அங்கே திரும்பி வந்தாள், அவளை உங்களுக்கு ஞாபகமிருக்கும். அவள் அங்கே வந்து, “கர்த்தர் எனக்கும் அதே வரத்தைக் கொடுத்திருக்கிறார்” என்று கூறினாள்.

அதற்கு நானோ “நல்லது அப்படியா?” என்று கூறினேன்.

அப்பொழுது அவள், “நான் அதை நிரூபிக்க எனக்கு ஒரு தருணம் இருந்தால் நலமாயிருக்கும்” என்றாள்.

அதற்கு நான், “அதோ அங்கே மேடை உள்ளது” என்றேன்.

51 அப்பொழுது என்ன நடந்தது என்பதை நீங்கள் கண்டீர்கள்; அது முழுக்க முழுக்க மனோவசியத்தால் நடைபெற்றதாயிருந்தது, பாருங்கள். ஆனால் நீங்கள், பாருங்கள், சகோதரி ஸ்நைடர் மேல் வந்தபொழுது, அச்சகோதரிக்கு கீல்வாத நோய் உள்ளதாகக் கூறப்பட்டது. அதுவே அது—அது—அது என்ன என்பதைக் காண்பித்துவிட்டது. அப்பொழுது சகோதரி ஸ்நைடர்…

52 அப்பொழுது நான், “அதுவல்ல அப்பெண்மனிக்கு உள்ள கோளாறு” என்றேன். மேலும் நான், “அவள் கீழே விழுந்து இடுப்பு முறிந்து போய்விட்டது” என்று கூறினேன். நான், “அவள் அங்கே நிற்கக் கூட முடியவில்லையே…”…என்று கூறினேன். அதை சகோதரி ஸ்நைடர் நன்றாக கேட்கவில்லை…அவள் கூறினாள், அவளுக்கு என்ன இருந்தது என்பதை. அது அவளது வயிற்றில் உண்டாயிருந்த கட்டி போன்ற ஒன்றாகும் என்று நான் நம்புகிறேன். அல்லது அதைப் போன்ற ஒரு கோளாறு ஆகும். நான், “அந்தவிதமான துன்பம் தான் அவளுக்கு இருந்தது, அதைப்பற்றித்தான் உட்கார்ந்து சகோதரர்களிடம் எப்பொழுது சொல்லிக்கொண்டிருப்பாள்” என்றேன். புரிகிறதா?

கோரினார். அது கிறிஸ்துவைப் போன்றே ஆவியாயிருந்தது என்றே நான் எண்ணுகிறேன்."]

ஆமென்.

["அச்சகோதரனுடைய இச்செயல் புகழத்தக்கதான ஒரு செயலாகும் என்று நான் கருதுகிறேன்."]

ஆம், ஐயா.

["அச்சகோதரன் தன்னை மன்னித்துக் கொள்ளுபடி கேட்டுக் கொண்டார். ஏனெனில் அவர் இவ்வுபதேசத்தை என்னிடம் கொண்டுவர முயற்சி செய்தார்".]

சரி.

["நான் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இக்காலையில் தன்னை மன்னித்துக் கொள்ளும்படி அவர் கேட்டார். இயேசுவின் நாமத்தினால் நானும் அவரை மன்னித்துவிட்டேன்".]

58 ஆமென். உங்களுக்கு நன்றி, சகோதரன் பென் ப்ரையாண்ட். இப்பொழுது அது—அது சரியாக இருக்கிறது…சகோதரன் பென் அவர்களே, நீங்கள் அதைக் கூறியதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் பாருங்கள், ஏனென்றால் அம்மனிதர்கள், எங்கும் சென்று தவறை திருத்திக் கொள்ளுதலைச் செய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட செயல்தான் உண்மையான கிறிஸ்தவமாகும். அதுதான் கிறிஸ்தவம் செயல்படுகிற ஒன்றாக இருக்கிறது. நீங்கள் தவறாயிருந்தால், பாருங்கள், போய் நீங்கள் தவறாயிருக்கிறீர்கள் என்பதை எழுந்து நின்று, "நான் தவறாயிருக்கிறேன், என்னை மன்னிக்க வேண்டும்" என்று கேளுங்கள். புரிகிறதா?

59 இப்பொழுது தன் தவறை எந்த ஒரு நபரும் பின்னுக்கு ஒளித்து வைத்தால், அப்பொழுது அவரிடத்தில் ஏதோ ஒரு பிழை இருக்கிறது. எதையோ அவர் மறைக்கிறார். அப்படி செய்யக்கூடாது. இல்லை ஐயா, இங்கே அந்த எளிய மருத்துவரைப் போல்…பேச முடியாது… பாருங்கள், அதைப்பற்றி நான் அவர்மேல் சொல்லவில்லை… ஆனால் எப்படியாயினும், அவர் ஒரு சிறிய காரியத்தைச் செய்யவேண்டுமென்றிருந்தார். நான், "ஓ, இல்லை, மருத்துவர் அவர்களே, நீங்கள் தேவனுக்கு பரிதானம் கொடுக்க முடியாது" என்று கூறினேன். மேலும் நான், "அதை ஒளிவு மறைவின்றி இங்கே சமர்ப்பித்திட வேண்டும்" என்றேன். அதுதான் சரியானது, அவ்விதமாக அது போகும்படி விட்டுவிட வேண்டும். நிச்சயமாகவே எந்தவித ஒரு தவறையும் செய்ய முயற்சிக்க அம்மனிதன் முழுவதும் அறியாமையுள்ளவராக இருந்தார். ஒரு துண்டு நிலத்தை பெற்றுக்கொள்வதற்கு அது ஒரு நல்ல வழியாக இருக்கும் என்று அவர்—அவர் எண்ணினார். அதைப் பொல்லாங்காய் செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கவில்லை, அவர் அதை சரியாக செய்ய முயற்சித்துக்கொண்டிருந்தார். ஆனால் அவர் விரும்பினார்…

அவர்,…“நான்…” என்று கூறினார். இங்கிருக்கிற இந்த நபரை தன் செல்வாக்கிற்கு உட்படுத்த யாரையாவது அதற்காக பிடித்துக்கொள்ள ஒரு வழியை அறிந்திருந்தார். நீங்கள் அந்தவிதமாக வழியில் அதைச் செய்யக்கூடாது. நீங்கள் நேரான வழியில் வரவேண்டும். புரிகிறதா? வார்த்தையோடு சரியாக நிலைத்திருங்கள். அப்பொழுது நீங்கள் அதைப் பெறுவீர்கள். வார்த்தையோடு சரியாக நிலைத்திருங்கள். எனவே அவ்விதமாக அவர் இருந்தபடியினால் தேவன் அவரை ஆசீர்வதித்து, அவருக்கு ஒரு பெரிய காரியத்தைச் செய்தார். ஆம், ஐயா.

60 சரி, இப்பொழுது நாம் ஜெபத்திற்கு நம்முடைய தலைகளை வணங்குவோமாக. ஜெபத்தில் எத்தனை பேர் நினைவுகூரப்பட வேண்டுமென்று விரும்புகிறீர்கள்? இங்கே சக்கர நாற்காலியில் வீற்றிருக்கும் ஒரு பெண்மணி நினைவுகூரப்பட வேண்டுமென்று நிச்சயமாகவே விரும்புவாள் என்று நான் நம்புகிறேன். இதோ இங்கே ஒரு சகோதரி, இந்த ஸ்தலம் முழுவதும் நோக்கிப் பார்ப்போம். இப்பொழுது நாம் யாவற்றையும் ஒதுக்கிவைத்துவிட்டு, ஆராதனைக்குள் பிரவேசிப்போம். அதற்காகவே நாம் இங்கே இருக்கிறோம், கிட்டத்தட்ட அடுத்த முப்பத்தைந்து, நாற்பது நிமிடங்களுக்கு ஆராதனை இருக்கும்.

61 இப்பொழுதும் கர்த்தாவே, எங்களை நாங்கள் உமக்கு முன்பாக அமைதிப்படுத்திக்கொள்ளுகையில், எங்களது மகத்தான யோசுவா, பரிசுத்த ஆவியானவராகிய எங்களது இந்நாளுக்குரிய தெய்வீக தலைவர் எங்களுக்கு முன்பாக இருப்பதை உணர்ந்து கொள்ளுகிறோம். மோசேக்கு முன்பாக யோசுவா ஜனங்களை அமைதிப்படுத்தி, “நாம் அந்த தேசத்தை எடுத்துக்கொள்ள நம்மால் கூடும்” என்று கூறினதைப்போல் உணருகிறோம். ஏனெனில் அவன் அந்த அமலேக்கியர்களையும் எமோரியர்களையும் நோக்கிப் பார்க்காமல், தேவனால் அளிக்கப்பட்ட தெய்வீக வாக்குத்தத்தையே நோக்கிப் பார்த்தான்.

62 இந்த குழப்பமான இந்நாளில், உலகம் இருக்கிற இந்த நிலையில், இன்றுள்ள இந்த அழகான ஓய்வு நாள் காலையில், உமக்கு முன்பாக நாங்கள் எங்களை அமைதிப்படுத்திக் கொள்கிறோம்; எல்லாவிதமான போலிகளின் மத்தியிலும், மாம்சப் பிரகாரமான பாவனைகளின் மத்தியிலும், எல்லா பொல்லாங்கு, தவறாக வழி நடத்தப்பட்ட ஆவிகளின் நடுவிலும் நாங்கள் எவ்வளவாய் தேவனுடைய வார்த்தையை நோக்கிப்பார்த்து, நாங்கள் முற்றிலும் ஜெயங்கொள்கிறவர்களாயிருக்கிறோம் என்று கூறுகிறோம்! தேவன் தனக்கு கறை திரையற்ற சபை ஒன்று உண்டாயிருக்கும் என்று கூறினார்; ஒரு நாளிலே நாங்கள் அச்சபையை காண்போம் என்பதை நாங்கள் அறிவோம். அதன் உறுப்பினர்கள் என்ற முறையில், நாங்கள் இந்த மகத்தான மறுபடியும் பிறந்த தேவனுடைய சபையின் உறுப்பினர்கள் என்பதாய் விசுவாசித்துக்கொண்டு, இன்று

பூமியின்மேல் உள்ள சபை அதுதான் என்று விசுவாசித்தவர்களாய், போராடிக்கொண்டு இருக்கிறோம்; எனவே நாங்கள் பயபக்தியுடன் தேவனை கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினால் அணுகுகிறோம்.

63 நாங்கள் தாழ்மையாக வருகையில், எங்களுடைய சிந்தைகளை விட்டும், எங்களுடைய இருதயங்களைவிட்டும், அனைத்து உலகப்பிரகாரமான காரியங்களையும், வாழ்வின் அனைத்து கஷ்ட துன்பங்களையும் அகற்றிவிட வேண்டுமென உம்மிடம் வேண்டுகிறோம். ஓ தேவனே, நாங்கள் உம்மை, உமது வார்த்தையை கேட்பதின் மூலம், தொழுதுகொள்ளச் செய்தருளும்படியாய் நீர் எங்களை ஆராதனைக்குரிய சரியான நிலையில் வைத்தருளும்.

64 இப்பொழுதும், இன்று காலையில் உள்ள எங்களது பாடத்தில் யோவான் மிகவும் அழுதான் என்பதைக் கண்டோம்; ஏனெனில் அப்புத்தகத்தை கையிலெடுக்க ஒரு மனிதனும் அங்கு பாத்திரவானாகக் காணப்படவில்லை. அதைப் போல நாங்களும் கர்த்தாவே, எங்கள் இருதயங்களில் அழமுடியும். ஏனெனில் அப்புத்தகத்தை திறக்க ஒருவனும் பாத்திரவானாக இல்லை. ஆனால் யோவானுடைய அழுகையோ சிறிது நேரம் நீடித்தது. சீக்கிரமாகவே அவன் ஆற்றித்தேற்றப்பட்டு, ஆட்டுக் குட்டியாவனர் வந்து புத்தகத்தை கையில் எடுத்தார். ஓ, தேவ ஆட்டுக்குட்டியானவரே, இன்று காலையில் வந்து அப்புத்தகத்தை எடுத்து, அதை எங்களுக்கு திறந்து தாரும், கர்த்தாவே, நாங்கள் உமக்குக் காத்திருக்கிறோம். எங்களுடைய இயலாமையில் நாங்கள் காத்திருக்கையில்… உம்முடைய பிரசன்னத்தினாலும், உமது வார்த்தையினாலும் எங்களை திருப்தியாக்கியருளும்.

65 ஓ, தேவ ஆட்டுக்குட்டியானவரே, அநேக கரங்கள் உம்மிடத்தில் உயர்த்தப்பட்டன; அவர்கள் ஒவ்வொருவருடைய இருதயத்தை நீர் அறிந்திருக்கிறீர் என்பதை நாங்கள் அறிந்துள்ளோம், ஏனெனில், நீர் அவர்களது விருப்பங்களை அறிந்திருக்கிறீர். நீர் என்றென்றும் இருப்பதுபோல இன்றைக்கும் அதே போன்ற தேவனாகவேயிருக்கிறீர். நீர் எப்பொழுதும் மாறாதவராயிருப்பீர். ஏனெனில் நீர் பரிபூரணராயும், எல்லையற்றவராகவும், நீர் மாறமுடியாதவராகவும் இருக்கிறீர். நீர் எங்களையும், ஒவ்வொருவருடைய வேண்டுகோளையும் திருப்தியாக்கியருளும் என்று இக்காலையில் நாங்கள் கேட்கிறோம். கர்த்தாவே, இவர்கள் யாவரும் இக்கட்டிடத்தை விட்டு கடந்து செல்லும் போது, தாங்கள் தேவனுடைய பிரசன்னத்தில் இருந்தோம் என்றும், தங்களுடைய இருதயத்தின் வாஞ்சைகள் அருளப்பட்டவர்களாய், கடந்து செல்லுகிறோம் என்று அவர்கள் திருப்தியடைந்திட அருள்புரியும். கர்த்தாவே, அந்த எண்ணிக்கையில் என்னையும் சேர்த்துக்கொள்ள மறந்துவிடாதேயும். நான் இதை இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறேன். ஆமென்.

பாத்திரத்தினுள் வைக்கப்பட்டது. அதனால் அது கெட்டுப் போகவோ அல்லது துருப்பிடித்தோப் போகாது.

218 பின்பு, அவர் வந்து முத்திரையொன்றை தனது சபைக்குத் திறந்து கொடுத்து, இவ்வாறு கூறுகிறார்; “பாருங்கள், நான் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறேன். பார்த்தீர்களா? புரிகிறதா? ஒரு ஈனப் பாவியானவன் நித்திய காலமாக எரிந்துகொண்டிருப்பானா, அது பத்து இலட்சம் ஆண்டுகள் எரிந்துவிட்டு பிறகு முற்றிலுமாக அழிக்கப்பட்டு போவானா என்பதைப் பற்றி நீங்கள் எப்பொழுதும் உங்களுக்குள் வியந்து கொண்டிருந்ததுண்டு. விஷயம் இவ்வாறு உள்ளது, அந்தவிதமாகவே அந்த கருத்து இருந்தது. நித்தியமான நரகம் என்று ஒன்று கிடையாது. அது நித்தியமானதாக இருக்கமுடியாது. ஏனெனில் ஆதிமுதற்கொண்டு நரகமானது, நான் இருந்து வருகிறது போலவே அப்பொழுதிலிருந்து இருக்கவில்லை. துன்மார்க்கரை தண்டிக்கவே நான் அதைச் சிருஷ்டித்தேன். புரிகிறதா? நீங்கள் எதைக் குறித்து பயமடைந்திருக்கிறீர்கள்? பாருங்கள், ஆபிரகாமின் வித்தும் மற்றும் இன்ன பிற காரியங்களைக் குறித்தும் பயமடைந்திருக்கிறீர்களா? அப்படியா…” என்று கூறுகிறார். அது அதனுடைய சுருக்கம் மாத்திரமே, பாருங்கள், ஆனால் தேவன் அதை திறந்து கொடுக்கும்பொழுதோ, அம்முத்திரைகளை திறக்கும்பொழுது, படிப்படியாக அது திறக்கப்படுகையில், நீங்கள் பாருங்கள், நீங்கள் அதைப் பெற்றுக்கொள்ளும்பொழுது, அப்பொழுது, நீங்கள் இந்தப் புத்தகத்தை விட்டு அகலவே முடியாது. அம்முத்திரைகள்…

219 நீங்களோ, “ஓ, முத்திரை வேறு அர்த்தம் கொண்டது, சகோதரன் பிரான்ஹாமே” என்று கூறுகிறார்கள்.

220 ஒரு நிமிடம் பொறுங்கள். அது இதனோடு சரியாக ஒத்திருக்க வேண்டும், ஏனெனில் முத்திரைகள் வேதத்தை வெளிப்படுத்தும்படி தனது பின்புறத்தில் முத்திரையிடப்பட்டிருந்தன. அது…அது என்னவாயிருக்கிறது? அது என்னவாயிருந்தது? இதோ, எரேமியாவைப் போலுள்ளது. *இன்னின்ன* காரியம் நடந்தது என்று நீங்கள் கூறுகிறீர்கள். *இதை* இழுங்கள், இங்கே தான் அது உள்ளது. சரி. *அதைக்* கிழியுங்கள். இங்கே பின்னால் திரும்பிப் பாருங்கள், அங்கே என்ன சம்பவித்தது என்பதைப் பற்றி அங்கே நீங்கள் வாசிக்கலாம். சரி. அது சரி. இதோ இங்கே அடுத்ததை திறவுங்கள்; இங்கே பாருங்கள், அதுதான் சம்பவித்தது. அதே காரியத்தைத்தான் இப்புத்தகம் உடையதாய் இருக்கிறது, பாருங்கள், அதன் பின்புறத்தில் உள்ளது.

221 அவர்கள், “பாருங்கள், என்னால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. சிலர் ‘பிதா குமாரன்’ சிலர் ‘பரிசுத்த ஆவி’ என்றும், வேறு சிலர் ‘இயேசுவின் நாமம்’ என்றும் கூறுகிறார்கள், யாவும் இதைப் போலதான் இருக்கிறது” என்று கூறுகிறீர்கள்.

உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ள முன்வருவீர்களா? உங்கள் தலைகள் வணங்கிய வண்ணமாக நீங்கள் உங்கள் கரங்களை உயர்த்துவீர்களா? இவ்வாறு, “நான்…” என்று கூறுங்கள்.

234 தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை, உங்களை ஆசீர்வதிப்பாராக. பின்னால் உள்ள உங்களை தேவன் ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை, உங்களை ஆசீர்வதிப்பாராக. அங்கே பின்னால் உள்ள உங்களை தேவன் ஆசீர்வதிப்பாராக. “நான் இப்பொழுது விசுவாசிக்கிறேன்” என்று கூறுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அங்கே அதோ அங்கே பின்னால் இருக்கிற அம்மனிதனை தேவன் ஆசீர்வதிப்பாராக. இப்பொழுது, நீங்கள் ஞாபகத்தில் கொள்ளுங்கள், *இங்கே* அல்ல, ஆனால் உங்கள் இருதயத்திலே, தேவனிடமாக நீங்கள் பகிரங்கமாக அறிக்கையிட்டு, “கர்த்தாவே, நாங்கள் கடைசி காலத்தில் இருக்கிறோம் என்பதை நான் அறிகிறேன். நான் முடிவுக்கு வந்துவிட்டேன்” என்று கூறுங்கள்.

235 அன்றொரு நாளிலே, நான் இங்கே இந்நகரத்திலுள்ள என் எளிய நண்பர் மருத்துவர் சாம் அடேயர் அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தேன். நாங்கள் அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தோம். அப்பொழுது நான், “சாம், எனக்கு கொஞ்சம் வாய்வுத் தொந்தரவு உண்டாயிருக்கிறது” என்றேன்.

அப்பொழுது அவர், “அது வாய்வு என்று நீங்கள் எப்படி அறிவீர்கள்? உங்கள் இருதயத்தை சுற்றி அவ்வாறு உள்ளதா?” என்று கேட்டார்.

அதற்கு நான், “ஆம்” என்றேன்.

236 அதற்கு அவர், “அது ஒரு வேளை இருதய—இருதய—இருதய—இரத்த உறைவாக—இருதயக்கோளாறாக—இருதயக்கோளாறாக இருக்கலாம். (என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்) அது ஒரு வேளை இருதயக் கோளாறாக இருக்கலாம்” என்றார்.

237 “அது அங்கே உள்ளது என்று எவ்வாறு நீர் அறிவீர்?” என்றார். மேலும் அவர், “நான் உங்களை சோதிக்கட்டும்” என்று கூறினார்.

அவர் என்னைப் பரிசோதித்துவிட்டு, “இல்லை, உம்மிடம் ஒரு கோளாறும் இல்லை” என்று கூறினார்.

238 நான், “சாம், அது வரும்பொழுதெல்லாம்…” என்று கூறினேன். நான் ஐம்பத்திரண்டு வயதுள்ளவனாக இருக்கிறேன். சாம் என்னவிட சிறிதே வயதில் மூத்தவர். நான், “சாம், அது வரும்பொழுது, இந்த முப்பதாண்டுகள் முழுவதிலும், நான் யாரை நேசித்து, யாருக்காக எத்தனை காலம் உழைத்தேனோ, அந்த இயேசு கிறிஸ்துவை மக்கள் விசுவாசிக்கச் செய்வதில்தான் என்னையே நான் அர்ப்பணித்துள்ளேன். அவர் வருகையில் அது எனக்கு ஒன்றும்

வித்தியாசமாயிருக்காது. நாம் பரம வீட்டிற்குப் போய் விடுவேன்” என்றேன்.

239 அதற்கு அவர், “பில்லி, உங்களுக்குத் தெரியுமா? மற்றவர்களுக்கு நான் ஏதாவது செய்வதில் தான் என்னுடைய தலைசிறந்ததை நான் பெற்றூக்கொள்ளுகிறேன்” என்றார்.

அப்பொழுது நான், “அதுவே உண்மையான வாழ்க்கை” என்றேன்.

240 நண்பரே, உங்களுக்கு இவ்வுலகில் ஒரு சுதந்தரம் உண்டாயிருக்குமானால், அது அழிந்து போய்விடும் சுதந்தரமாகும். ஆனால் நாமோ வாடிப்போகாத சுதந்தரத்தையே பெற்றுக்கொள்கிறோம். கெட்ட குமாரன் தனது சுதந்தரத்தை விட்டு அகன்று போனான். அவன் அதில் ஒரு பாகத்தை மட்டும் தன்னோடு எடுத்துச் சென்றான். அவன் திரும்பி வந்தபொழுது அவனது சுதந்தரம் மாத்திரமே கெட்டுப்போனது. ஆனால் நீங்கள் உங்களுடையதை விட்டு விட்டால், அது தேவனுடைய ராஜ்ஜியத்திற்குரியதல்ல, நாம் அழிவில்லாத சுதந்தரத்தையே பெற்றுக்கொள்கிறோம். நீங்கள் அதைப் பெற்றுக்கொள்ள விரும்பவில்லையா? பாவிகளாயிருக்கிற சுமார் பதினைந்து பேர்கள் தங்களுடைய சுதந்தரத்தை பெற விரும்பியவர்களாய் தங்கள் கரத்தை இக்காலையில் இங்கே உயர்த்தியுள்ளனர். நாம் ஜெபம் பண்ணுவதற்கு முன்னால் இன்னும் வேறு யாராவது உண்டா? ஆம்.

இப்பொழுது மிகவும் மெதுவாக பாடுவோம்:

நான் அவரை நேசிக்கிறேன். நான்…(இப்பொழுது உங்களுடைய சிந்தையில் தீர்மானம் செய்யுங்கள். நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று உணர்ந்தால், இதுவே அதற்குரிய தருணம்.)
ஏனெனில் அவர் என்னை முதலில் நேசித்தார்.
சம்பாதித்தார் என் இரட்சிப்பை

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாரார…?

241 *[நான் அவரை நேசிக்கிறேன்* என்ற பாடலை சகோதரன் பிரான்ஹாம் தாழ்ந்த குரலில் பாடுகிறார்—ஆசி.] பரலோகப் பிதாவே எங்களை அமைதிப்படுத்தும் இவ்வேளையில், இன்று காலையிலே நாங்கள் இக்கூட்டத்தினரை, இன்று காலையிலே நாங்கள் இக்கூட்டத்தினரை உம்மிடம் பெலவீனமான நிலையில் கொண்டு வருகிறோம். கர்த்தாவே, இந்த செய்தியை நான் இம்மக்களுக்கு கொண்டு வர முயலுகிறேன், ஏனெனில் நான் அவர்களை நேசிக்கிறேன். கர்த்தாவே, அவர்கள் இதைக் கேட்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவர்கள் நங்கூரமிடப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். கடந்த சில ஆண்டுகளாக

